முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1069

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.09.2022, வெள்ளிக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா வாழ்க
ஞானபலம் கொண்ட தேசிகா வாழ்க
வானவர்கள் போற்றுகின்ற மாதர்மத்தை
வள்ளலாக வாரி வழங்கும் அரங்கனே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 17 நாள், 02.09.2022 வெள்ளிக்கிழமை)
ஊழ்வென்று உலக மக்களை மீட்க
ஓங்காரக்குடில் படைத்த ஆறுமுக அரங்கனே
3. அரங்கனே எந்தன் அவதாரம் நீ
அரங்கனே உன் உபதேசம் என் உபதேசமாகும்
வரங்கள் மக்களுக்கு தரவேண்டியே
வையகத்தில் உன் வழி யான் இயங்குகின்றேன்
4. இயங்குகின்ற இந்த சூட்சுமத்தை அறியவே
எந்நாளும் உலகோர் தர்மத்தை செய்யவேண்டும்
தயங்காது உன் நாமஜெபத்தை சொன்னால் போதும்
தானவர்கட்கெல்லாம் தண்டாயுதன் என்னருளும் துணையும் உண்டு உண்டு
5. உண்டான உயர் வேலி அறவேலியாகக் கொண்டு
உலகத்தை மீட்பேன் என அவதாரம் புரிந்துள்ள
தண்டாயுதன் என் மகா சூட்சுமமே
தவசியே ஆறுமுக அரங்கனே
6. அரங்கனே உன் உபதேசமே இந்த உலகை மீட்கும்
அரங்கனே உன் சன்மார்க்கமே இந்த உலகை ஆளும்
வரமென உன் தர்மத்தை ஏற்றால் போதும்
வையகமே பேர் இடரிலிருந்து மீட்கக்கூடும்
7. கூடாத அனைத்து ஆக்கினைகளும் அகன்றோடி
குரு அரங்கன் உன் தயவாலே
ஈடேற்றம் சடுதி காணும்
இந்த உலகம் ஞான உலகமாக மாற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–